**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,</u>**

**<u>கிருஷ்ணராயபுரம்.</u>**

**<u>முன்னிலை</u> : திரு.ஆர்.பாக்கியராஜ், பி.ஏ., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கிருஷ்ணராயபுரம்.**

திருவள்ளுவராண்டு 2055 விசுவாவசு வருடம், வைகாசி மாதம் 29–ஆம் நாள்

2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 12 – ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**பழைய <u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 16/2019</u>**

**<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 125/2021</u>**

**<u>CNR.NO. TNKR11-000138-2021</u>**

தமிழக அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்,
மாயனூர் காவல் நிலையம்,
குற்ற எண்.289/2017
சட்டபிரிவுகள் : 457, 380 IPC --- புகார்தாரர்

// எதிர்//

சிவசுப்பிரமணியன்,
த/பெ. மருதைவீரன்,
பகவதி அம்மன் கோவில் தெரு,
திருக்காம்புலியூர்,
கிருஷ்ணராயபுரம் தாலுக்கா,
கரூர் மாவட்டம். --- குற்றம்சாட்டப்பட்டவர்

| | | |
|---|---|---|
| 1. | Name of the court | District Munsif Cum Judicial Magistrate, Krishnarayapuram |
| 2. | Name of the Judge | Thiru.R.Bagyaraj, B.A., B.L., |
| 3. | Date of Judgment | 12.06.2026 |
| 4. | Case Number along with CNR Number | CC.125/2021,<br>CNR No.TNKR11-000138-2021 |
| 5. | Name of the Parties of the case | Inspector of Police<br>Mayanoor P.S.<br>/Vs/<br>Sivasubramaniyan |
| 6. | Date of Occurrence | 17.08.2017 |
| 7. | Date of Complaint | 01.09.2017 |
| 8. | Date of Arrest if any and Remand | 1st Remand – 25.09.2017<br>2nd Remand – 29.10.2025 |
| 9. | Period of remand of the accused | 1st Remand – 25.09.2017 - 09.11.2017 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 2nd Remand – 29.10.2025 to Till date custody | | |
| 10. | Date of Release on bail | 1st Release – 09.11.2017<br>2nd - Till date custody | | |
| 11. | Date of Final report | 27.10.2017 | | |
| 12. | Date of Committal of the case to the Court of Session | Nil | | |
| 13. | Date of questioning of the accused U/s. 240 CRPC | 09.05.2019 | | |
| 14. | Date of examination in Chief and Cross examination of the witness | No. of. Witness | Chief | Cross |
| | | PW-1 | 03.10.2023 | 27.11.2025 |
| | | PW-2 | 03.10.2023 | 06.02.2026 |
| | | PW-3 | 03.10.2023 | 27.11.2025 |
| | | PW-4 | 04.01.2024 | - |
| | | PW-5 | 11.01.2024 | 06.02.2026 |
| | | PW-6 | 27.03.2026 | 27.03.2026 |
| | | PW-7 | 08.05.2026 | 08.05.2026 |
| 15. | Date of filing of all miscellaneous petitions and their results including the results on challenge before Superior Courts except routine petitions like petition under section 317 of the Code | Nil | | |
| 16 | Date of examination of the accused U/s. 313 of the Code | 14.05.2026 | | |
| 17. | Details of abscondence of an accused and his appearance/production as the case may be | 03.10.2022 to 30.08.2023<br>09.10.2023 to 29.12.2023<br>10.09.2024 to 29.10.2025 | | |
| 18. | Grant of stay by Superior Courts and the results thereof | Nil | | |
| 19. | Date of Commencement of Trial | 03.10.2023 | | |
| 20. | Date of closure of Trial | 08.05.2026 | | |
| 21. | Date of Sentence or order | 12.06.2026 | | |
| 22. | Date of service of copy of judgment to the accused | 12.06.2026 | | |
| 23. | If any delay, give explanation | No | | |

இவ்வழக்கு கடந்த 30.05.2026 ஆம் நாள் என் முன்பாக இறுதி

விசாரணைக்கு வந்து, அரசு தரப்பிற்காக கற்றறிந்த அரசு உதவி வழக்கறிஞர் நிலை–1 திருமதி.S.பெரியமறத்தி அவர்கள் ஆஜராகி எடுத்துரைத்தும், எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.செல்வக்குமார் அவர்கள் ஆஜராகி எடுத்துரைத்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று 12.06.2026 ம் நாள் இந்நீதிமன்றம் வழங்கும், தீர்ப்புரை

| | |
|---|---|
| புகார்தாரர் | அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர்,<br>மாயனூர் கா. நி. கு. எண். 289/2017 |
| எதிரியின் பெயர் | சிவசுப்பிரமணியன்,<br>த/பெ. மருதைவீரன்,<br>பகவதி அம்மன் கோவில் தெரு,<br>திருக்காம்புலியூர்,<br>கிருஷ்ணராயபுரம் தாலுக்கா,<br>கரூர் மாவட்டம். |
| அரசு தரப்பில் எதிரி மீது சாட்டப்பட்ட குற்றம் | U/s. 457, 380 IPC |
| நீதிமன்றத்தால் எதிரி மீது சாட்டப்பட்ட குற்றம் | U/s. 457, 380 IPC |
| எதிரியின் பதில் | குற்றவாளிஅல்ல |
| நீதிபதியின் முடிவு | இதச பிரிவு 380 ன் படி குற்றவாளி |
| அரசு குற்ற வழக்கறிஞர் | திருமதி.S.பெரியமறத்தி |
| எதிரி தரப்பு வழக்கறிஞர் | திரு.S.செல்வக்குமார் |
| இருதரப்பு வாதம் கேட்கப்பட்ட நாள் | 30.05.2026 |
| தீர்ப்பு வழங்கப்பட்ட நாள் | 12.06.2026 |

**தீர்ப்புரை**

இவ்வழக்கானது மாயனூர் காவல் நிலையம், காவல் ஆய்வாளர் அவர்களால் கு.வி.மு.ச. பிரிவு 173–இன் கீழ் 01.09.2017 ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையின் அடிப்படையில் எதிரி மீது இ.த.ச. பிரிவு 457, 380 ன் கீழான குற்றத்திற்காக குளித்தலை நீதித்துறை நடுவர் எண்.II

நீதிமன்றத்தில் சி.சி.எண் 16/2019 என்ற எண்ணில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு இந்நீதிமன்றம் 2021ம் ஆண்டு புதியதாக ஆரம்பிக்கப்பட்டதால் காவல்நிலைய எல்லை நிலவரையரை அடிப்படையில் மாண்புமிகு கரூர் தலைமை குற்றவியல் நீதிமன்றம் ROC.No.23/2020/A1, 27.01.2021 என்ற உத்தரவின்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு இந்நீதிமன்ற சி.சி.எண். 125/2021 ன் படி கோப்பிற்கு எடுக்கப்பட்ட வழக்காகும்.

**இறுதியறிக்கையின் சுருக்கம்:**

கடந்த 17.08.2017 ம் தேதி 22.00 முதல் 18.08.2017 ம் தேதி காலை 09.00 மணிக்குள் கரூர் – திருச்சி மெயின் ரோடு கிருஷ்ணராயபுரம் அ.சா.1 க்கு சொந்தமான இந்தியா மொபைல்ஸ் & ஏஜென்சீஸ் என்கிற செல்போன் கடையின் பூட்டை உடைத்து இவ்வழக்கின் எதிரி சிவசுப்பிரமணியன் என்பவர் அத்துமீறி நுழைந்து அ.சா.1 க்கு சொந்தமான OPPO A37 (IMEI – 866343033781011, VIVO Y21L (IME1 – 864711033137032, ITEL A21 – IME1 - 911565706865300), ITEL A11 (IME1 – 911566700522608) CELCON DIAMOND (IME1 – 911565900133844), OPPO A37 IMEI 865639035043683, CELCON DIAMOND POP MODEL C GOLD IMEI 911541651118102, INDEX AQUVA LIONS 4 G MODEL IMEI 911564855492743, CELCON C23 MODEL BLACK + BLUE IMEI 911492500791485, CELCON C23 MODEL BLACK + BLUE IMEI 911492500790248, 911507050182825 IMEI எண்ணுள்ள 4G TAB 7 MODEL BLACK + BLUE நிற TAB ஒன்று, 911507050167263 IMEI என்ற எண்ணுள்ள 4G TAB 7 MODEL BLACK + BLUE நிற TAB ஒன்று Lap top – 1 மற்றும் V.R.Box ஒன்றும் ஆக மொத்தம் ரூ.70,200/– மதிப்புள்ள சொத்தை திருடிய குற்றத்தை புரிந்துள்ளார். எனவே, மேற்படி எதிரியின் செய்கையானது ச/பி 457, 380 ன் படி தண்டிக்கப்பட வேண்டிய குற்றமாகும் என்று இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) மாயனூர் காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளரால் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கை எதிரியின் மீது கு.வி.மு.ச.பிரிவு 173 ன் படி வழக்கை கருத்தில் கொண்டு குற்ற சட்டப்பிரிவு 457, 380 – இதசவின் கீழாக கோப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்ப உத்திரவிடப்பட்டது.

3) எதிரி முன்னிலையானவுடன் அவருக்கு கு.வி.மு.ச பிரிவு 207–ன் படி வழக்கு ஆவணங்களின் நகல்கள் வழங்கி, எதிரியிடம் குற்றம் பற்றி வினவப்பட்டது. பின்னிட்டு எதிரியின் மீது சட்டப்பிரிவு 457, 380 இதசவின்

கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கிக் கூறி வினவிய போது எதிரி தங்கள் மீதான குற்றத்தை மறுத்துரைத்தார். எனவே, அரசு தரப்பு சாட்சிகளை விசாரிக்க உத்தரவிடப்பட்டது.

**4)** இந்த வழக்கில் பட்டியல் சாட்சி 1 முதல் 9 குறிப்பிடப்பட்டுள்ளது. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அரசு தரப்பில் சான்றாவணங்கள் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.12 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அரசு தரப்பில் பட்டியல் சாட்சி 4 மற்றும் 5 விசாரிக்காமல் Dispence செய்யப்பட்டுள்ளார்கள். எதிரி தரப்பில் வாய்மொழி சாட்சியம் அளிக்கவில்லை. ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. சான்று பொருள் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

**5)** **<u>அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து வெளிபடும் வழக்கு சங்கதிகள் சுருக்கம் பின்வருமாறு:</u>**

**5.1)** அ.சா.1. செந்தில்குமார் புகார்தாரர் மற்றும் பாதிக்கப்பட்ட நபர். 17.08.2017 ம் தேதி இரவு 10.00 மணிக்கு கடையை பூட்டிவிட்டு சென்றுவிட்டார். அடுத்த நாள் காலை 09.00 மணிக்கு வந்து கடையை பார்த்தபோது கடையின் ஷெட்டரில் உள்ள பூட்டு உடைக்கப்பட்டிருந்தது. மேலும் அ.சா.1 கடைக்கு உள் சென்று பார்த்தபோது செல்போன்கள் கலைந்திருந்தது. மேலும் மொபைல் போன் என்னென்ன களவு போனது என்று பார்த்தபோது 10 மொபைல் போன், ஒரு லேப்டாப் மற்றும் VR BOX திருட்டுபோயிருந்தது. திருட்டுபோன பொருட்களின் மொத்த மதிப்பு ரூ.1,00,000/- பெறும். அருகில் உள்ள நகைகடையில் உள்ள சிசிடிவி கேமராவில் பார்த்து செக் செய்தார். அதில் ஆஜர் எதிரியின் வீடியோவில் பதிவாகியுள்ளது. தற்போது அ.சா.1 யிடம் காட்டப்படும் புகார் அ.சா.1 கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் அ.சா.1 உடையது தான் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**5.2)** அ.சா.6 திரு.முகமது ஜாபர் காவல் உதவி ஆய்வாளர் கடந்த 01.09.2017 ம் தேதி அன்று 15.00 மணிக்கு மாயனூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளர் பணியில் இருந்த போது செந்தில்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று மாயனூர் காவல் நிலைய குற்ற எண்.289/2017 சட்டப்பிரிவு 457, 380 இதச பிரிவின் படி வழக்கு செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். பின்னிட்டு அன்றைய தினமே சம்பவ இடம் சென்று

சாட்சிகள் அமிர்தானந்தம், வடிவேல் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார்.

**5.3)** சாட்சிகள் பாரத், தியாகராஜன் ஆகியோர்கள் முன்னிலையில் எதிரி ஆஜர் செய்த 1. Itel A21 Model Gold நிற Cell phone–1 , 2.Vivo Y21 கிரே கலர் செல்போன் –1, 3.செல்கான் டைமண்ட் U மாடல் கோல்டு நிற செல்போன் ஒன்று, 4.Itel A11 Blue நிற செல்போன் ஒன்று, 5.Oppo A37 Block நிற உடைந்த நிலையில் செல்போன் ஒன்று, 6. செல்கான் டைமண்ட் Pop மாடல் C கோல்டு நிற செல்போன் ஒன்று , 7. செல்கான் டைமண்ட் Pop மாடல் C23 புளூ நிற செல்போன் ஒன்று, 8.செல்கான் டைமண்ட் Pop மாடல் கருப்பு மற்றும் நீல நிற செல்போன் ஒன்று, 9. Intex Aqua Lions 4G மாடல் செல்போன் ஒன்று , 10. OPPo A37 கருப்பு நிற செல்போன் ஒன்று , 11.4 G TAB கருப்பு மற்றும் நீல நிற TAB ஒன்று, 12. 4 G TAB கருப்பு மற்றும் நீல நிற TAB 7 மாடல் ஒன்று, 13.Conveys VR Player ஒன்று, 14. HP ProBook 5320 M Model Brown நிற Laptop ஒன்று ஆகியவற்றை மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியுள்ளார்.

**5.4)** சாட்சிகள் பாரத், தியாகராஜன் ஆகியோர்களை தனிதனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். வழக்கில் கைப்பற்றப்பட்ட 1. Itel A21 Model Gold நிற Cell phone–1 , 2. Vivo Y21 கிரே கலர் செல்போன் –1, 3.செல்கான் டைமண்ட் U மாடல் கோல்டு நிற செல்போன் ஒன்று, 4. Itel A11 Blue நிற செல்போன் ஒன்று, 5. Oppo A37 Block நிற உடைந்த நிலையில் செல்போன் ஒன்று, 6. செல்கான் டைமண்ட் Pop மாடல் C கோல்டு நிற செல்போன் ஒன்று , 7. செல்கான் டைமண்ட் Pop மாடல் C23 புளூ நிற செல்போன் ஒன்று, 8.செல்கான் டைமண்ட் Pop மாடல் கருப்பு மற்றும் நீல நிற செல்போன் ஒன்று, 9. Intex Aqua Lions 4G மாடல் செல்போன் ஒன்று , 10. OPPo A37 கருப்பு நிற செல்போன் ஒன்று , 11. 4 G TAB கருப்பு மற்றும் நீல நிற TAB ஒன்று, 12. 4 G TAB கருப்பு மற்றும் நீல நிற TAB 7 மாடல் ஒன்று, 13. Conveys VR Player ஒன்று, 14. HP ProBook 5320 M Model Brown நிற Laptop ஒன்று. படிவம்–95 ன் மூலம் மற்றும் எதிரியையும் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தார். புலன் விசாரணை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 457, 380 ன் படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

**6)** அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமான

அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ) மற்றும் 351(1)(ஆ) இன் படி 14.05.2026 ஆம் தேதி வினவியபோது எதிரி அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களைப் பொய் சாட்சி, பொய் வழக்கு என்றும், எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும், கூறினார்.

**7)** இருதரப்பு கற்றறிருந்த வழக்கறிஞர்களின் வாதம் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு ஆவணங்கள் அனைத்தும் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. தற்போது வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம், **அரசு தரப்பில் எதிரியின் மீது இதச பிரிவுகள்** 457, 380 இதசவின் கீழ் **வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபிக்கப்பட்டுள்ளதா**? என்பதே ஆகும்.

**<u>8) அரசு தரப்பு வாதம் :–</u>**

அரசு தரப்பில் வாதிட்ட கற்றறிந்த அரசு உதவி வழக்கறிஞர் நிலை –1 அவர்கள் தனது வாதத்தில், அ.சா.1 முதல் அ.சா.3 வரையான சாட்சிகள் அ.சா.1 ன் கடையில் உள்ள பொருட்கள் திருடுபோனது பற்றி தெளிவாகவும், நம்பும்படியும், ஏற்கும்படியும் சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், புகார் திருடுபோனது உறுதி செய்கிறது என்றும், திருடுபோன பொருட்கள் எதிரியிடமிருந்து தான் மீட்கப்பட்டது என்று அ.சா.5 மற்றும் அ.சா.7 ஆகிய சாட்சிகள் நம்பும்படியும், ஏற்கும்படியும் சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், மேற்படி சாட்சிய வாக்குமூலங்களையும், ஆவணங்களையும் படித்து காண்பித்து எதிரி தான் திருடிய நபர் என்றும், எதிரிக்கு அதிகப்படியான தண்டனை வழங்கும்படியும் வாதிட்டார்.

**<u>9) எதிரி தரப்பு வாதம்:–</u>**

வழக்கு காலதாமதமாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்கில் கைப்பற்றப்பட்ட பொருட்கள் எதிரியிடமிருந்து கைப்பற்றவில்லை என்றும், அ.சா.5 மற்றும் அ.சா.7 ஆகிய சாட்சிகள் எதிரிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும், மேற்படி நபர்களின் சாட்சியத்தை ஏற்க கூடாது என்றும், கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பொருட்கள் வெளிசந்தையில் கிடைக்கக்கூடிய பொருட்கள் என்றும், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் எதிரிக்கு எதிராக காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றும், சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு எதிரி மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் நிரூபிக்கவில்லை என்றும், எதிரியை விடுதலை

செய்யவேண்டும் என்றும் வாதிட்டார்.

**10) தீர்வு.**

**அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:–**

கடந்த 17.08.2017 ம் தேதி 22.00 முதல் 18.08.2017 ம் தேதி காலை 09.00 மணிக்குள் கரூர் – திருச்சி மெயின் ரோடு கிருஷ்ணராயபுரம் அ.சா.1 க்கு சொந்தமான இந்தியா மொபைல்ஸ் & ஏஜென்சீஸ் என்கிற செல்போன் கடையின் பூட்டை உடைத்து இவ்வழக்கின் எதிரி சிவசுப்பிரமணியன் என்பவர் அத்துமீறி நுழைந்து அ.சா.1 க்கு சொந்தமான OPPO A37 (IMEI – 866343033781011, VIVO Y21L (IME1 – 864711033137032, ITEL A21 – IME1 - 911565706865300), ITEL A11 (IME1 – 911566700522608) CELCON DIAMOND (IME1 – 911565900133844), OPPO A37 IMEI 865639035043683, CELCON DIAMOND POP MODEL C GOLD IMEI 911541651118102, INDEX AQUVA LIONS 4 G MODEL IMEI 911564855492743, CELCON C23 MODEL BLACK + BLUE IMEI 911492500791485, CELCON C23 MODEL BLACK + BLUE IMEI 911492500790248, 911507050182825 IMEI எண்ணுள்ள 4G TAB 7 MODEL BLACK + BLUE நிற TAB ஒன்று, 911507050167263 IMEI என்ற எண்ணுள்ள 4G TAB 7 MODEL BLACK + BLUE நிற TAB ஒன்று Lap top – 1 மற்றும் V.R.Box ஒன்றும் ஆக மொத்தம் ரூ.70,200/– மதிப்புள்ள சொத்தை திருடிய குற்றத்தை புரிந்துள்ளார் என்பது அரசு தரப்பு வழக்காகும்.

**11) இ.த.ச பிரிவு 457, எதிரியை பொறுத்து:**

அ.சா.1 தனது சாட்சியத்தில் 17.08.2017 ம் தேதி இரவு 10.00 மணிக்கு கடையை பூட்டுவிட்டு சென்றுவிட்டார். அடுத்த நாள் காலை 09.00 மணிக்கு வந்து கடையை பார்த்தபோது கடையின் ஷெட்டரில் உள்ள பூட்டு உடைக்கப்பட்டிருந்தது. மேலும் அ.சா.1 கடைக்கு உள் சென்று பார்ததபோது செல்போன்கள் கலைந்திருந்தது. மேலும் மொபைல் போன் என்னென்ன களவு போனது என்று பார்த்தபோது 10 மொபைல் போன், ஒரு லேப்டாப் மற்றும் VR BOX திருட்டுபோயிருந்தது. திருட்டுபோன பொருட்களின் மொத்த மதிப்பு ரூ.1,00,000/– பெறும். அருகில் உள்ள நகைகடையில் உள்ள சிசிடிவி கேமராவில் பார்த்து செக் செய்தேன். அதில் ஆஜர் எதிரியின் வீடியோவில் பதிவாகியுள்ளது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**11.1)** அ.சா.1 தனது முதல் விசாரணையில், பூட்டு உடைப்பட்டிருந்ததும் பொருட்கள் திருடுபோயிருந்தது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். திருடிய நபரை யாரும் நேரில் பார்க்கவில்லை. அ.சா.1 தனது

சாட்சியத்தில், சிசிடிவி கேமரா பதிவை பார்த்து தான் இவ்வழக்கின் எதிரி என்று தெரிந்துக் கொண்டதாக சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், அரசு தரப்பில் சிசிடிவி கேமரா பதிவை தாக்கல் செய்யவில்லை. அதனால், எதிரி தான் பூட்டை உடைத்து இரவு நேரத்தில் ஒழிந்து அத்துமீறி நுழைந்தார் என்ற குற்றச்சாட்டு நிரூபிக்கவில்லை. எதிரி மீது இதச பிரிவு 457 ன் படி வனையப்பட்ட குற்றச்சாட்டு நிரூபிக்கவில்லை என்றும், எதிரி விடுதலை பெறதக்கவர் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

<u>12) இ.த.ச பிரிவு 380–ஐ பொறுத்து</u>

**12.1)** அ.சா.1 தனது சாட்சியத்தில் 17.08.2017 ம் தேதி இரவு 10.00 மணிக்கு கடையை பூட்டுவிட்டு சென்றுவிட்டார். அடுத்த நாள் காலை 09.00 மணிக்கு வந்து கடையை பார்த்தபோது கடையின் ஷெட்டரில் உள்ள பூட்டு உடைக்கப்பட்டிருந்தது. மேலும் அ.சா.1 கடைக்கு உள் சென்று பார்ததபோது செல்போன்கள் கலைந்திருந்தது. மேலும் மொபைல் போன் என்னென்ன களவு போனது என்று பார்த்தபோது 10 மொபைல் போன், ஒரு லேப்டாப் மற்றும் VR BOX திருட்டுபோயிருந்தது. திருட்டுபோன பொருட்களின் மொத்த மதிப்பு ரூ.1,00,000/– பெறும். அருகில் உள்ள நகைகடையில் உள்ள சிசிடிவி கேமராவில் பார்த்து செக் செய்தேன். அதில் ஆஜர் எதிரியின் வீடியோவில் பதிவாகியுள்ளது. தற்போது அ.சா.1 யிடம் காட்டப்படும் புகார் அ.சா.1 கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் அ.சா.1 உடையது தான் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**12.2)** அ.சா.2 மாரிமுத்து சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சி தனது சாட்சியத்தில், 17.08.2017 ம் தேதி இரவு 10.00 மணிக்கு கடையை பூட்டி விட்டு சென்றுவிட்டோம். அடுத்த நாள் காலை 09.00 மணியளவில் கடைக்கு வந்து பார்த்தபோது கடையின் பூட்டு உடைக்கப்பட்டிருந்தது. அதன் பிறகு கடைக்கு உள்ளே சென்று பார்த்தபோது 10 மொபைல் போன் திருட்டுபோயிருந்தது. மேலும், லேப்டாப்,VR BOX திருட்டுபோயிருந்தது. மொத்தம் திருட்டுப்போன பொருள் அனைத்தும் சுமார் ரூ.1,00,000/– பெறும் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**12.3)** அ.சா.3 ராமநாதன் சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சி தனது சாட்சியத்தில், கடந்த 18.08.2017 ம் தேதி காலை 09.00 மணியளவில் அ.சா.3 ன் பக்கத்து கடையான இந்தியா மொபைல் ஏஜென்சிஸ் என்ற கடையின் பூட்டு

உடைக்கப்பட்டிருந்தது. அந்த கடையில் போன், லேப்டாப் திருட்டுபோயிருந்தது. அதன் மதிப்பு சுமார் 70,000/– இருக்கும் என சாட்சியம் அளித்துள்ளார்.

**12.4)** அ.சா.ஆ–1 புகார் மேற்படி ஆவணத்தை உற்று நோக்கும் போது கடந்த 17.08.2017 ம் தேதி இரவு 10.00 மணிக்கு கடையை பூட்டி விட்டு விட்டோம். அடுத்த நாள் காலை 09.00 மணிக்கு கடையை பார்த்த போது கடையின் உள்ள பூட்டு உடைக்கப்பட்டிருந்தது உள்ளே சென்று பார்த்த போது பொருட்கள் கலைக்கப்பட்டும், செல்போன்கள் திருடு போய் இருந்தது என்று புகாரில் சொல்லப்பட்டுள்ளது. மேற்படி, புகாரில் புகாரை பெற்று குற்ற எண்.289/2017 இதச பிரிவுகள் 457, 380 ன் படி 01.09.2017 ம் தேதி 15.00 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டதாக குறிப்பு எழுதப்பட்டுள்ளது. மேற்படி, குறிப்பு மூலம் அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்த சங்கதி நிரூபிக்கப்பட்டுள்ளது.

**12.5)** அ.சா.ஆ.5 முதல் தகவல் அறிக்கை அ.சா.6 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தை உற்றுநோக்கும்போது கடந்த 01.09.2017 அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு 07.09.2017 அன்று நீதிபதியால் பெறப்பட்டுள்ளது தெரிய வருகிறது. இதன் மூலம் அ.சா.1 யிடம் பெற்ற புகாருக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற சங்கதி நிரூபிக்கப்பட்டுள்ளது.

**12.6)** அ.சா.1 தனது கடையில், திருடுபோனது பற்றி புகார் அளித்து சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 மாரிமுத்து தனது கடையில் திருடு போயிருந்தது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.3 ராமநாதன் பக்கத்து கடையில் திருடுபோனது பற்றி சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அ.சா.1 கொடுத்த புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை ஆகியவற்றின் மூலம் அ.சா.1 கடையில் செல்போன் மற்றும் கணிணி கம்யூட்டர் சம்பந்தப்பட்ட பொருட்கள் திருடுபோன சங்கதி நிரூபிக்கப்பட்டுள்ளது.

**12.7)** ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.7 பாரத் என்பவரின் முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.5 தியாகராஜன் என்பவரின் இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக

குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி என்று "**கம்ப்யூட்டர், லேப்டாப் மற்றும் செல்போன்களை மறைத்து வைத்திருக்கும் இடங்களையும் அடையாளம் காட்டி தங்களிடம் எடுத்து ஆஜர் செய்கிறேன்**" என்ற பகுதி குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**12.8)** அ.சா.5 சாட்சி தியாகராஜன் தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரியைத் தெரியும் என்றும், சாட்சி தியகராஜனும், சாட்சி பரத் என்பவரும் 29.09.2017 ம் தேதி காலை 09 – 09.30 மணியளவில் இருசக்கர வாகனத்தில் குளித்தலையிலிருந்து கரூர் நோக்கி சென்று கொண்டிருந்தபோது மாயனூர் போலிசார் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்ததாகவும் அப்போது எதிரி நெம்பர் பிளேட் இல்லாத இருசக்கர வாகனத்தில் வந்தபோது போலிசார் தேக்கி எதிரி நிற்காமல் சென்று விரட்டி பிடித்து விசாரித்த போது ஆர்சி.புக் மற்றும் பொருட்கள் எங்கே என்று கேட்டு எதிரி ஆற்றுஓரமாக கரையில் அழைத்துச் சென்று கரையில் கொட்டாயி இருந்த 10 க்கும் மேற்பட்டசெல்போன்கள் லேப்டாப் மற்றும் ஒரு பாக்ஸ் இருந்ததை கைப்பற்றினார்கள் என்றும், ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அவருடையது என்றும், கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அவருடையது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.5 ஐ எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது எதிரியிடமிருந்து என் முன்னிலையில் பொருட்கள் கைப்பற்றியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல என்று குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். அரசு தரப்புக்கு விரோதமாக எதிரி தரப்புக்கு ஆதரவாக எந்த பதிலும் குறுக்கு விசாரணையில் பெறவில்லை. அ.சா.5 தியாகராஜன் அ.சா.1 கடையில் உள்ள பொருட்கள் அனைத்தும் எதிரி அழைத்துச் சென்று போலிசாரிடம் ஆஜர்ப்படுத்தினார் என்றும், தெளிவாகவும், நம்பும்படியும் சாட்சியம் அளித்துள்ளார். இவரின் சாட்சியம் எதிரிக்கும், சாட்சிக்கும் முன்விரோதம் இல்லாத நிலையில் அ.சா.5 எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்க வேண்டிய அவசியமில்லை. அதனால் இவரின் சாட்சியம் ஏற்கப்படுகிறது.

**12.9)** அ.சா.7 பாரத் தனது சாட்சியத்தில், 27.09.2017 ம் தேதி முடக்குச்சாலையில் போலிசார் வாகன சோதனையில் ஈடுபட்டு கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது சிவசுப்ரமணியனை விசாரித்த போது செல்போன் கடையில் செல்போன் லேப்டாப் திருடியதாக ஒப்புக் கொண்டு

திருடிய பொருட்களை திருக்காம்புலியூர் எல்.என்.டி கம்பெனி அருகே ஆற்றுப்படுகையில் குடிசையில் வைத்திருப்பதாக கூறி போலிசார் அழைத்துச் சென்ற போது ஆற்றுப்படுகை குடிசையில் எதிரி பதிக்கி வைத்திருந்த ஆஜர் செய்த செல்போன், லேப்டாப் ஆகியவற்றை மகசரில் கைப்பற்றியதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். குறுக்கு விசாரணையில், அ.சா.7 முதல் விசாரணையில் சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல என்று குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். ஆனால், அ.சா.7 யிடம் குறுக்கு விசாரணை அரசு தரப்புக்கு எதிராகவோ, எதிரி தரப்புக்கு ஆதரவாகவும் எந்த பதிலும் பெறவில்லை. அ.சா.7 க்கும், எதிரிக்கும் எந்த முன்விரோதமும் இல்லாத நிலையில் அ.சா.7 எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்க வேண்டிய அவசியமில்லை. அதனால், அ.சா.7 ன் சாட்சியம் நம்பும்படியும், ஏற்கும்படியும் உள்ளது. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.7 ன் முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**13)** கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.9 ஆக அ.சா.6 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி, ஆவணத்தை உற்றுநோக்கும்போது 25.09.2017 ம் தேதி காலை 11.00 மணிக்கு எதிரி சிவசுப்ரமணியனிடமிருந்து சாட்சிகள் பாரத், தியாகராஜன் ஆகியோர்கள் முன்னிலையில், காவல் உதவி ஆய்வாளர் முகமதுஜாபர் என்பவரால் காவல் நிலையம் முன்பு 1. 911565706865300 IMEI எண்ணுள்ள itel A 21 Model Gold நிற செல்போன் ஒன்று. 2, 864711033137032 IMEI எண்ணுள்ள Vivo Y21L Model Grey நிற செல்போன் ஒன்று. 3. 911565900133844 IMEI எண்ணுள்ள Celkon Diamond U model Gold நிற செல்போன் ஒன்று, 4. 911566700522608 IMEI எண்ணுள்ள itel A11 Model Blue நிற செல்போன் ஒன்று, 5. 866343033781011 IMEI எண்ணுள்ள Oppo A-37 Model Black நிற செல்போன் உடைந்த நிலையில் ஒன்று. 6. 911541651118102 IMEI எண்ணுள்ள Celkon diamond POP Model C-Gold நிற செல்போன் ஒன்று. 7. 911492500791485 IMEI எண்ணுள்ள Celkon C 23 Model Black + Blue நிற செல்போன் ஒன்று. 8. 911492500790248 IMEI எண்ணுள்ள Celkon C23 Model Black + Blue நிற செல்போன் ஒன்று. 9. 911564855492743 IMEI எண்ணுள்ள INTEX aqua Lions 4G Model Champagne நிற செல்போன் ஒன்று. 10. 865639035043693 IMEI எண்ணுள்ள Oppo A-37 Model Black நிற செல்போன் ஒன்று. 11. 911507050182825 IMEI எண்ணுள்ள 4G Tab 7 Model Black + Blue நிற TAB ஒன்று. 12. 911507050167263 IMEI எண்ணுள்ள 4G Tab 7 Model Black + Blue நிற TAB ஒன்று. 13. CONVEX Inspired

Driving V.R.Palyer ஒன்று. 14. hp probook 5320 m Model Brown நிற Laptop ஒன்று. கைப்பற்றப்பட்டதாக உள்ளது. மேலும், கைப்பற்றுதல் மகசரில் உள்ள அ.சா.7 பாரத் என்பவரின் முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. கைப்பற்றுதல் மகசரில் உள்ள அ.சா.5 தியாகராஜன் என்பவரின் இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி, கைப்பற்றுதல் மகசரிலிருந்து எதிரியை மேற்படி பொருட்கள் உதவி ஆய்வாளரால் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. திருடிய நபருக்கு தான் திருடிய பொருட்கள் எங்கு மறைத்து வைக்கப்பட்டுள்ளது என்று தெரிய வரும் திருட்டுப்பொருட்கள் எதிரியிடமிருந்து தான் கைப்பற்றப்பட்டுள்ளன. அதனால், எதிரி தான் திருடிய நபர் ஆவார். அல்லது திருட்டுப்பொருளை தெரிந்தே வாங்கிய நபர் ஆவார் என்று இந்நீதிமன்றம் அனுமானிக்கிறது. எதிரி இவ்வழக்கின் சான்று பொருட்களை ஆஜர் செய்வதால் எதிரி தான் அ.சா.1 ன் கடையில் பொருட்களை திருடியுள்ளார் என்று சங்கதி நிரூபிக்கப்பட்டுள்ளது. எதிரி இதச பிரிவு 380 ன் படி குற்றவாளி என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**14)** வழக்கு காலதாமதமாக பதிவு செய்யப்பட்டுள்ளது பொய் வழக்கு என்றும், சாட்சிகளை ஏற்க கூடாது என்றும், எதிரி தரப்பில் வாதிட்டதை பரிசிலினை செய்யும் போது வழக்கு சம்பவம் 17.08.2017 ம் தேதி இரவு 10.00 மணிக்கு மேல் நடைபெற்றுள்ளது. புகாரில், 01.09.2017 ம் தேதி புகார் பெற்று வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. புகாரில், எதிரியின் பெயரோ, அடையாளம் கண்டோ புகார் கொடுக்கப்படவில்லை. அதனால், எதிரி மீது முன் விரோதம் கொண்டு புகார் கொடுத்ததாக எடுத்துக் கொள்ள முடியாது. காலதாமதமாக வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தாலும் எதிரியிடமிருந்து வழக்கு பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதால் வழக்கு பதிவு செய்ய ஏற்பட்ட காலதாமதம் அரசு தரப்பு வழக்கை பாதிக்கவில்லை என்றும், எதிரி தரப்பு மேற்படி வாதம் ஏற்புடையதல்ல என்றும், இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**15)** அ.சா.4 வடிவேல் பார்வை மகசர் தனது சாட்சியத்தில், 01.09.2017 ம் தேதி செல்போன் திருட்டு போன கடையின் முன்பாக மாயனூர் போலிசார் பார்வையிட்டு படம் வரைந்தனர். அப்போது மாலை சுமார் 04.00 மணி இருக்கும். அதற்காக தயார் செய்த பார்வை மகசரில் சம்பவ இடத்தில் கையெழுத்து செய்து கொடுத்தோம் என சாட்சியம் அளித்துள்ளார்.

**16)** அ.சா.ஆ.6 பார்வை மகசர் மற்றும் அ.சா.ஆ.2 பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தை உற்றுநோக்கும்போது சம்பவயிடமானது காவல் நிலையத்திலிருந்து சுமார் 04 கி.மீ மேற்கில் அமைந்துள்ளது. சம்பவயிடமானது கரூர் – திருச்சி மெயின் ரோடு கிருஷ்ணராயபுரத்தில் சம்பவயிடம் காட்டப்பட்டுள்ளது. அ.சா.ஆ.7 மாதிரி வரைபடம் மேற்படி ஆவணத்தை உற்றுநோக்கும்போது திருச்சி – கரூர் ரோடு கிருஷ்ணராயபுரம் நியூ இந்தியன் மொபைல்ஸ் கடையில் சம்பவம் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. சம்பவயிடத்திற்கு செல்லாமல் அங்குள்ள அம்சங்களை வரைபடமாக வரைய முடியாது. அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7 ஆவணங்கள் மூலம் சம்பவயிடத்திற்கு புலன் விசாரணை அதிகாரி சென்று பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளர் என்பது தெரிய வருகிறது.

**17)** அ.சா.6 திரு.முகமதுஜாபர் மாநகர குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் புலன் விசாரணை பற்றி சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 யிடம் புகார் வாக்குமூலம் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சம்பவயிடம் சென்று பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**18.** அ.சா.ஆ.10 படிவம் 91 அ.சா.6 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தை உற்றுநோக்கும்போது 1. 911565706865300 IMEI எண்ணுள்ள itel A21 Model Gold நிற செல்போன் ஒன்று. 2. 864711033137032 IMEI எண்ணுள்ள Vivo Y-21 -L Model Grey நிறசெல்போன் ஒன்று. 3. 911565900133844 IMEI எண்ணுள்ள Celkon Diamond U model Gold நிற செல்போன் ஒன்று. 4. 911566700522608 IMEI எண்ணுள்ள itel A11 Model Blue நிற செல்போன் ஒன்று. 5. 866343033781011 IMEI எண்ணுள்ள Oppo A – 37 Model Black நிற செல்போன் உடைந்த நிலையில் ஒன்று. 6. 911541651118102 IMEI எண்ணுள்ள Celkon diamond POP Model C – Gold நிற செல்போன் ஒன்று. 7. 91149500791485 IMEI எண்ணுள்ள celkon C – 23 Model Balck + Blue நிற செல்போன் ஒன்று. 8. 911492500790248 IMEI எண்ணுள்ள Celkon C – 23 Model Black + Blue நிற செல்போன் ஒன்று. 9. 911564855492743 IMEI எண்ணுள்ள INTEX aqua Lions 4G Model Champagne நிற செல்போன் ஒன்று. 10. 865639035043683 IMEI எண்ணுள்ள Oppo A 37 Model Black நிற செல்போன் ஒன்று. 11. 911507050182825 IMEI எண்ணுள்ள 4G Tab – 7 Model Black + Blue நிற TAB ஒன்று. 12. 911507050167263

IMEI எண்ணுள்ள 45 TAB 7 Model Black + Blue நிற TAB ஒன்று. 13. Convex Inspired Driving VR Player ஒன்று 14. hp pro Book 5320 m model Brown நிற Labtop ஒன்று அ.சா.1 செந்தில்குமார் குளித்தலை நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்ற R.P.No.59/2017 ன் படி Crlmp.No.4237/2017. ன் படி அதன் உரிமையாளரான அ.சா.1 செந்தில்குமார் இடைக்கால பராமரிப்பில் பெற்றுச் சென்றுள்ளார் என்பது தெரிய வருகிறது.

**19)** எதிரி மீது சட்டப்பிரிவு 380 இதசவின் படியான எடுத்துரைக்கப்பட்ட குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எதிரிக்கு அளிக்கக்கூடிய தண்டனை பற்றி எதிரியிடம் குவிமுச பிரிவு 255(2) BNSS 278(2) ன் படி வினவிய போது எதிரி கீழ்க்கண்டவாறு பதில் அளித்தார்.

**"எனக்கு இரண்டு குழந்தைகள் படிக்கிறார்கள் அவர்களின் வாழ்க்கையை பார்க்க வேண்டும் மன்னித்து விடுதலை செய்யவும்"** எதிரிக்கு மேற்படி கூற்றை பரிசிலினை செய்து எதிரிக்கு குறைந்தபட்ச அபராதம் மட்டும் தண்டனை வழங்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியில், எதிரிக்கெதிரான 457 இதசவின் கீழ் குற்றவாளி அல்ல என்றும், விடுதலை பெறத்தக்கவர் என்றும் குவிமுச பிரிவு 248 (1) மற்றும் 271(1)–ன் கீழ் எதிரியை விடுதலை செய்தும், மேலும், எதிரி இதச பிரிவு 380 ன் படி குற்றவாளி என்று முடிவு செய்து எதிரிக்கு 380 ன் படியான குற்றத்திற்கு மூன்று மாதம் சாதாரணை சிறை தண்டனை விதித்தும், ரூ.2,000/– அபராதம் விதித்தும், கட்டத்தவறினால் இரண்டு வாரம் சாதாரண சிறை தண்டனை விதித்தும் குவிமுச பிரிவு 248 (2) மற்றும் 271 (2)–ன் படி தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி கடந்த 25.09.2017 முதல் 09.11.2017 வரை மற்றும் 29.10.2025 முதல் தற்பொழுது வரை சிறையில் இருந்த 271 நாட்களை கு.வி.மு.ச.பிரிவு 428 மற்றும் சட்டப்பிரிவு 468 BNSS ன் படி தண்டனை நாட்களாக கருதி கழிக்க உத்திரவிடப்படுகிறது. எதிரி அபாரத்தொகை செலுத்தியபிறகு பிணைமுறி ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

குளித்தலை நீதிமன்ற எண்.II ஆர்.பி.எண். 59/2017 லிருந்து இந்நீதிமன்ற ஆர்.பி.எண் 25/2021 ல் உள்ள 1. 911565706865300 IMEI எண்ணுள்ள itel A21 Model Gold நிற செல்போன் ஒன்று. 2. 864711033137032 IMEI எண்ணுள்ள Vivo Y-21 -L Model Grey நிறசெல்போன் ஒன்று. 3. 911565900133844 IMEI எண்ணுள்ள

Celkon Diamond U model Gold நிற செல்போன் ஒன்று. 4. 911566700522608 IMEI எண்ணுள்ள itel A11 Model Blue நிற செல்போன் ஒன்று. 5. 866343033781011 IMEI எண்ணுள்ள Oppo A – 37 Model Black நிற செல்போன் உடைந்த நிலையில் ஒன்று. 6. 911541651118102 IMEI எண்ணுள்ள Celkon diamond POP Model C – Gold நிற செல்போன் ஒன்று. 7. 91149500791485 IMEI எண்ணுள்ள celkon C – 23 Model Balck + Blue நிற செல்போன் ஒன்று. 8. 911492500790248 IMEI எண்ணுள்ள Celkon C – 23 Model Black + Blue நிற செல்போன் ஒன்று. 9. 911564855492743 IMEI எண்ணுள்ள INTEX aqua Lions 4G Model Champagne நிற செல்போன் ஒன்று. 10. 865639035043683 IMEI எண்ணுள்ள Oppo A 37 Model Black நிற செல்போன் ஒன்று. 11. 911507050182825 IMEI எண்ணுள்ள 4G Tab – 7 Model Black + Blue நிற TAB ஒன்று. 12. 911507050167263 IMEI எண்ணுள்ள 45 TAB 7 Model Black + Blue நிற TAB ஒன்று. 13. Convex Inspired Driving VR Player ஒன்று 14. hp pro Book 5320 m model Brown நிற Labtop ஒன்று அதன் உரிமையாளர் இடைக்கால பராமரிப்பில் பெற்றுச் சென்றுள்ளார். அ.சா.1 செந்தில்குமார் குளித்தலை நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்ற R.P.No.59/2017 ன் படி Crlmp.No.4237/2017. ன் படி அதன் உரிமையாளரான அ.சா.1 செந்தில்குமார் இடைக்கால பராமரிப்பில் பெற்றுச் சென்றுள்ளார் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு மேல்முறையீடு இல்லாத நிலையில் மேற்படி பொருட்களை அ.சா.1 செந்தில்குமார் நிரந்தரமாக வைத்துக் கொள்ள உத்தரவிடப்படுகிறது. அ.சா.1 சொத்துக்காக எழுதிக் கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு மேல்முறையீடு இல்லாத நிலையில் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

2026–ம் ஆண்டு ஜுன் மாதம் 12 –ம் நாள் இத்தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு இன்று என்னால் சரிபார்க்கப்பட்டு இந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
Date: 2026.06.16 04:45:46 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கிருஷ்ணராயபுரம்.**

**பின் இணைப்பு**

**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள்**

| சாட்சிகளின் எண்ணிக்கை | சாட்சிகளின் பெயர் | விளக்கம் |
|---|---|---|

| | | |
|---|---|---|
| அ.சா.1 | செந்தில்குமார் | புகார்தாரர் |
| அ.சா.2 | மாரிமுத்து | கேள்விப்பட்ட சாட்சி |
| அ.சா.3 | ராமநாதன் | கேள்விப்பட்ட சாட்சி |
| அ.சா.4 | வடிவேல் | பார்வை மகசர் சாட்சி |
| அ.சா.5 | தியாகராஜன் | ஒப்புதல் வாக்குமூல சாட்சி |
| அ.சா.6 | திரு.முகமது ஜாபர் | புலன் விசாரணை அதிகாரி |
| அ.சா.7 | பாரத் | கைப்பற்றுதல் மகசர் சாட்சி |

**<u>அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள்</u>**

| **சான்றாவணங்களின் எண்ணிக்கை** | **தேதி** | **சான்றாவணம்** | **நிரூபித்தவர் /சான்றளித்தவர்** |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 07.09.2017 | புகார் | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | 12.10.2018 | பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் | அ.சா.4 |
| அ.சா.ஆ.3 | 26.09.2027 | ஒப்புதல் வாக்குமூலம் நகலில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் | அ.சா.5 |
| அ.சா.ஆ.4 | 26.09.2027 | கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் | அ.சா.5 |
| அ.சா.ஆ.5 | 26.09.2017 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.6 |
| அ.சா.ஆ.6 | 12.10.2018 | பார்வை மகசர் | அ.சா.6 |
| அ.சா.ஆ.7 | 12.10.2018 | மாதிரி வரைபடம் | அ.சா.6 |
| அ.சா.ஆ.8 | 26.09.2027 | ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி | அ.சா.6 |
| அ.சா.ஆ.9 | 26.09.2027 | கைப்பற்றுதல் மகசர் | அ.சா.6 |
| அ.சா.ஆ.10 | 26.09.2017 | படிவம் – 95 | அ.சா.6 |
| அ.சா.ஆ.11 | 26.09.2027 | ஒப்புதல் வாக்குமூலம் நகலில் உள்ள முதலாவது | அ.சா.7 |

| | | | |
|---|---|---|---|
| | | சாட்சி கையொப்பம் | |
| அ.சா.ஆ.12 | 26.09.2027 | கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் | அ.சா.7 |

**எதிரி தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சி:–இல்லை**

**எதிரி தரப்பில் சான்று பொருட்கள் :– இல்லை**

**அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்று பொருள்:– இல்லை**

RAMAIYAH BAGYARAJ
Digitally signed by RAMAIYAH BAGYARAJ
Date: 2026.06.16 04:45:52 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கிருஷ்ணராயபுரம்.**

**பின்சேர்க்கை:**

1. தீர்ப்பு விவரம் காவல் துறைக்குத் தெரிவிக்கப்பட்டது.
2. எந்த சாட்சியும் விசாரணைக்காக 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

**நகல்:**

மாண்பமை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.